தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 6, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 சனவரி 19, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு''.

தான் இருந்த கூடு தனியே இருக்கும்படி அதை விட்டுவிட்டு, பறவை வேறு இடத்திற்குப் பறந்து சென்றுவிடுவதைப் போன்றதுதான் நமது உடம்போடு நம் உயிருக்குள்ள உறவு.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. சா. இளஞ் செழியன் அவர்கள் 14—9—1990ஆம் நாளன்றும், திரு. பி.ஆர். கந்தசாமி கவுண்டர் அவர்கள் 14—12—1990 ஆம் நாளன்றும், திரு. கே. போஜன் அவர்கள் 18—12—1990 ஆம் நாளன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித் துக்கொள்கிறேன்.

திரு. வி. சா. இளஞ்செழியன் அவர்கள் 1967ஆம் ஆண்டி லிருந்து 1971ஆம் ஆண்டு வரையிலும், 1971ஆம் ஆண்டி லிருந்து 1976ஆம் ஆண்டு வரையிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அன்றைய விறாலிமலைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1977ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பி. ஆர். கந்தசாமி கவுண்டர் அவர்கள் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரை பொள்ளாச்சி பொது கிராமப்புற தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கே. போஜன் அவர்கள் 1967ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டு வரை நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்).

2. இரங்கல் தீர்மானம்.

உறுப்பினர் திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் அவர்கள் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்கள்.

* **மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன், இந்த அவையில் இந்த இரங்கல் தீர்மானத்தைக் கொண்டுவர நேரிட்டதை எண்ணி நான் வருந்துகிறேன்.

"இனிய பண்பும், நல்ல உள்ளமும், செயல் ஆற்றலும் கொண்டவரும், இப்பேரவையில் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட